21st November 1963] [புலவர் கா. கோவிந்தன்]

ராலும், எல்லா அரசியல் கட்சியினராலும் போற்றப்படும் அளவுக்கு உயர்ந்த கருத்துக்கள் கொண்டவராக இருக்கிறார் என்பதை எடுத்துக் கூறினேனே தவிர, காந்தியாருக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக நான் கூறவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கொண்டுவந்த இத்தீர்மானத்தின்மீது முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களையும், எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்துக்களையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய தீர்மானம் முழு அளவில் இப்போது நிறைவேறவில்லை என்றாலும், சீக்கிரத்திலேயே முழு அளவில் உருப்பெறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. சிறு பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் காலையில் சண்டை போடுவார்கள். பின்னால் மாலையில் இருவருக்கும் பேச வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். ஆனால் யார் முதலாவது பெயரைக் கூப்பிடுவது என்கின்ற மான உணர்வு மாணவர்களுக்கே உண்டாகிவிடுகிறது. அந்த முறையில் பொறுப்பிலிருக்கின்ற நம்மிடையே, எதிர்க் கட்சியினர் எவ்வளவுதான் நல்ல தீர்மானமாகக் கொண்டு வந்தாலும், அதை எப்படி ஏற்றுக்கொள்வது என்கின்ற நிலைமை இருக்குமானால், அந்த நிலைமைக்கு நான் இடமளிக்காமல், இந்தத் தீர்மானத்தை—வள்ளுவர் நாளுக்கு விடுமுறை நாள் கொடுக்கும் இத்தீர்மானத்தை—நாளைக்கே ஆளும் கட்சியிலிருந்தே கொண்டுவந்து நிறைவேற்றட்டும் என்று கூறி, அதற்கான வாய்ப்பை அளிக்கின்ற என்னுடைய இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The resolution was, by leave, withdrawn.

X.—ANNOUNCEMENT.

ARREST OF A MEMBER.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Hon. Speaker has received intimation from the Inspector-General of Police at 10-40 a.m. and from the Superintendent of Police, Salem, at 10-48 a.m. to-day about the arrest of Sri P. V. Sriramulu, representing the Krishnagiri constituency under Section 151, Criminal Procedure Code, at 16.00 hours on the 20th November 1963.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், ஸார், இது தபால் மூலம் வந்திருக்கிறதா, அல்லது தந்தி மூலம் தகவல் கிடைத்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நான் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்தது 10-27 மணிக்கு ஆகும். அதற்குப் பிறகு எப்போது கிடைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : At about midnight from Salem by telegram.

[21st November 1963

திரு. மு. கருணாநிதி : சட்ட மன்ற உறுப்பினர் திரு. கமல நாதன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அந்தத் தகவலும் கனம் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

MR. DEPUTY SPEAKER : If information is received, it will be communicated to the House.

SRI K. A. MATHIALAGAN rose . . .

MR. DEPUTY SPEAKER : No discussion will be allowed.

IX.—NON-OFFICIAL RESOLUTIONS—*cont.*

(3) APPOINTMENT OF A COMMITTEE TO SECURE REDUCTION OF PRICES OF ESSENTIAL ARTICLES OF LIFE, TO PREVENT HOARDING, SPECULATION AND BLACKMARKETING AND TO ARREST THE GROWING MENACE OF ADULTERATION.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன். பிரேரேபித்து நான் பேசிய பிறகு 1-30 மணிக்கு இருக்கக் கூடிய இடத்தில் நிறுத்திவிட்டு அடுத்த நான்-அஃபிஷியல் கூட்டத்தில் அதை முடித்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய யோசனை. அல்லது நான் 10 நிமிஷம் பேசிய பிறகு அட்ஜர்ன் பண்ணினாலும் சரி. பாக்கியை நான் அடுத்த கூட்டத்தில் பேசிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த விஷயம் என்றைக்கும் பழசு ஆகப் போவதில்லை.

Sir, I move—

'This House resolves to recommend to the Government that a Committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life, to prevent hoarding, speculation and blackmarketing and to arrest the growing menace of adulteration.'

SRI K. R. NALLASIVAM : Sir, I second it.

(திரு. ஆர். வீ. சுவாமிநாதன் குறுக்கீடு.)

MR. DEPUTY SPEAKER : Resolution moved—

'This House resolves to recommend to the Government that a committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life, to prevent hoarding, speculation and blackmarketing and to arrest the growing menace of adulteration.'

திரு. மீ. கலியாணசுந்தரம் : விலைவாசி குறையவேண்டும் என்பது கட்சி பிரச்னை அல்ல. அது உண்மையான தேசியப் பிரச்னை. இதைக் கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமி